**செ. கு. எண்**:362

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.10.2012

சென்னை, வடபழனியைச் சேர்ந்த திரு. வேணுகோபால் என்பவரின் மகன் திரு. துளசிதாஸ் 4.10.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் மயிலாப்பூர், சாந்தோம் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது மாநகர பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மெய்யூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏகாம்பரம் என்பவரின் மகன் திரு. குணசேகரன் 4.10.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் செங்கல்பட்டு நகரம், G.S.T. சாலையில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், ஆசாரகுப்பம் கிராமம், திருவண்ணாமலை – விழுப்புரம் சாலையில் 6.10.2012 அன்று திருவண்ணாமலையிலிருந்து விழுப்புரம் நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து சாலையோர மரத்தின் மீது மோதியதில், அந்தப் பேருந்தில் பயணம் செய்த போளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மனைவி திருமதி மல்லிகா பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த திரு. துளசிதாஸ், திரு. குணசேகரன் மற்றும் திருமதி மல்லிகா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் நான்கு நபர்களும், விழுப்புரம் மாவட்டம், ஆசாரகுப்பம் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் 27 நபர்களும் காயம் அடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. துளசிதாஸ், திரு. குணசேகரன் மற்றும் திருமதி மல்லிகா ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**